**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 46/2008**

**பி.வா.சா.1**

| | |
|---|---|
| சாட்சியின் பெயர் | : ரஹீமா பீவி |
| தகப்பனார் பெயர் | : முகமது இப்ராஹிம் |
| வயது | : 60/2024 |
| தொழில் | : |
| மதம் | : |
| ஜாதி | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |
| மாவட்டம் | : |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 27.06.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த வழக்கு சம்பந்தமாக என் வழக்கறிஞரிடம் சொல்லி தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து நத்தம் புறம்போக்கு வகைப்பாடு ஆகும் அதற்கு நான் பட்டா பெற்றுள்ளேனா என்றால் பட்டா வாங்கியுள்ளேன். பி.வா.சா.2வது ஆவணமான பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.2ல் என்னுடைய இடத்தை வரைபடம் வரைந்து காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பி.வா.சா.2 ஆவணமும் அதில் உள்ள வரைபடம் குறித்து எவ்வித ஆட்சேபணையும் இல்லை. என்னுடைய வீடு மற்றும் காலியிடம் வடபுறம் அமைந்துள்ளது. என்னுடைய இடத்திற்கு தென்புறம் வாதியின் வீடு மற்றும் காலிமனை உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.2 ஆவணமான பட்டாவில் என்னுடைய வீட்டிற்கு சர்வே எண்.1975/19 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய நிலத்திற்கு தனியாக

பட்டாவும், வாதியின் நிலத்திற்கு தனியாக பட்டாவும் உள்ளதுஎன்றால் சரிதான்.

**வாதி தரப்பில் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

**Principal District Munsif**
**Vedasandur**